REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 28உ திங்கள் (13—12—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 29உ செவ்வாய் (14—12—54) [இதழ் 156

சிந்து மாகாண முன்னாள் அமைச்சர் கைது

கராச்சி, டிச. 11—

சிந்து மாகாண மந்திரி சபையில் அமைச்சராகப் பணியாற்றிய சையத் குலாம் ஹைதர்ஷா, சிந்து பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டார்.

ஹைதராபாத்தில் நடைபெற்ற சட்ட சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு வெளியே வந்ததும் அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் ஹைதராபாத் மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிகிறது.

பட்டம் தாணு ஆட்சிக்கு வேட்டு!

காங்கிரஸ் கட்சி தீர்மானம்

திரு-கொச்சியில் அரசியல் மாற்றம் ஏற்படும்

பட்டம் தாணுவின் ம. சோ. கட்சி அரசாங்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது.

118 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்ட சபையில், 19 உறுப்பினர்களை மட்டுமே கொண்ட ம. சோ. கட்சியினர் அமைச்சர் குழு அமைக்க ஆதரவு காட்டிய திரு-கொ. காங்கிரஸ் கட்சி, அந்த ஆதரவை மீட்டுக் கொள்வது என முடிவுகட்டி விட்டது.

இனி 46 உறுப்பினர்களைக் கொண்ட மேற்படி காங்கிரஸ் கட்சி, திரு-கொ. சட்ட சபையில் எதிர்க் கட்சியாக இருக்கப் போவதாக அறிவித்து விட்டது.

அதாவது, வெளிப்படையாகக் கூற வேண்டுமானல், பட்டம் தாணுவை பதவியிலிருந்து விலக்கிவிட்டு, தானே பதவியில் அமருவது என காங்கிரஸ் தீர்மானித்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

இதுவரை திரு-கொ. காங்கிரசுடன் ஊடல் புரிந்து கொண்டிருந்த திரு-கொ. த. நா. காங்கிரஸ், மீண்டும் அத்துடன் ஒன்றுபட்டு ஒத்துழைப்பது எனத் திரைமறைவில் முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அறியக் கிடக்கிறது.

எர்ணுகுளம், டிச. 12—

நேற்று, இங்கு கூடிய திரு—கொச்சி காங்கிரஸ் கட்சி, சிறுபான்மை ம. சோ. கட்சி அரசாங்கத்திற்கு இதுவரை கொடுத்து வந்த ஆதரவையும், ஒத்துழைப்பையும் மீட்டுக்கொள்வது எனத் தீர்மானித்துவிட்டது.

காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்கள், புதிய, பழைய மாநில காங்கிரஸ் குழு உறுப்பினர்களுமாக மொத்தம் 142 நபர்கள் கூடி இருந்தனர். திரு—கொச்சி மாநில காங்கிரஸ் குழு தலைவரான மாதவன் நாயர் தலைமையில் மேற்படி கூட்டம் நிகழ்ந்தது.

ம. சோ. கட்சி அரசாங்கத்திற்கு, காங்கிரஸ் காட்டி வந்துள்ள ஆதரவை மீட்டுக்கொள்ளும் தீர்மானம் 1,500 சொற்களைக் கொண்டதாக உள்ளது. மேற்படி தீர்மானத்தை, காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர் குழுத் தலைவர் பனம்பள்ளி கோவிந்த மேனன் முன்மொழிந்தார். தீர்மானத்தை, டாக்டர் ஏ. ஆர். மேனன் என்ற சட்ட சபை உறுப்பினர் ஒருவர் நீங்கலாக, மற்றவர் அனைவரும் ஒரே மனதாக ஆதரித்தனர்.

ம. சோ. கட்சி மந்திரி சபைக்குக் காங்கிரஸ் கொடுத்து வரும் ஆதரவை மீட்டுக் கொள்ளுவதில் அவசரம் காட்டக்கூடாது என அழுத்தந் திருத்தமாக அவர் பன்னிப் பன்னி கூறியுள்ளார்.

"காங்கிரஸ் அதிகாரத்தில் இருந்த காலத்தில் செய்துள்ளதைக் காட்டிலும் மோசமான செயலை இந்த (ம. சோ. கட்சி) ஆட்சி செய்துவிடவில்லை. தங்களுடைய போது ஒத்துழைப்பைக் காங்கிரஸ் இந்த ஆட்சிக்குக் கொடுத்ததற்கே, கம்யூனிஸ்டு கட்சியின்மீது இருந்த பற்றின்மையே ஒழிய, மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் மேலிருந்த பற்றல்ல காரணம்."

இரண்டாவது ஐந்தாண்டு திட்

(4-ம் பக்கம் பார்க்க)

★

தமிழர் மனக் கொதிப்புக்கு சாந்தி?

தமிழர்களைச் சுட்டுத் தள்ளிய பட்டம் தாணு பிள்ளை ஆட்சிக்கு வேட்டு வைக்க ஏற்பாடாகி வருகிறது.

மனக் கொதிப்படைந்துள்ள தமிழ் மக்களைச் சாந்தி செய்ய, பட்டம் ஆட்சி ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்ற கருத்து வலுத்து விட்டது.

சோஷலிஸ்டு மாநாட்டில், டாக்டர் லோகியா எடுத்துக் கொண்ட முயற்சி தோற்கடிக்கப்பட்டது கண்டு, தமிழ் நாட்டில், சோஷலிஸ்டுகள் மனக்கசப்பு அடைந்துள்ளனர்.

அவர்களும் பட்டம் ஆட்சி ஒழிந்தாக வேண்டும் என்று கருதுகின்றனர்.

இப்போது இதற்கான சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

"ஏன் ஆதரவை நிறுத்துகிறோம்?"

காங்கிரஸ் தீர்மானம் தரும் விளக்கம்

"திரு-கொச்சி மாநிலத்தில் கடந்த 9 மாத காலமாக இயங்கி வரும் ம. சோ. கட்சி மந்திரி சபையின் நிர்வாகம், 'முழுத் தோல்வி'யாகவே இருந்திருக்கிறது."

"தென் தாலுகாக்களில் வதியும் தமிழர்களின் மனத் தாங்கல் எப்போதுமில்லாத அளவு, இந்த ம. சோ. மந்திரி சபைக் காலத்தில் உச்சம் பெற்றுள்ளது."

"திருவாங்கூர், கொச்சி ஆகிய பகுதிகளில் வாழும் மக்களிடையே குறுகிய இட வெறி, தேவையில்லாது தூண்டப்பட்டுள்ளது."

இவ்வாறு, திரு-கொச்சி ஆட்சி பீடத்திலிருக்கும் ம. சோ. கட்சிக்கு தனது ஆதரவைத் தொடர்ந்து தருவதில்லை என்று திரு-கொச்சி காங்கிரஸ் குழுவினர் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

"ஏன் இனியும் பி. சோ. மந்திரி சபைக்கு காங்கிரஸ் ஆதரவு தரக் கூடாது ?"—என்று விளக்குகிற அத்தீர்மானத்தில், மேலும் காணப்படுவதாவது :—

"காங்கிரஸ் ஆதரவு தந்தால் ம. சோ. மந்திரி சபை நல்லதொரு நிர்வாகத்தை நடத்த முடியுமென நினைத்தோம் ; ஆனல், இதுவரை எந்த ஒரு காரியத்திலும், காங்கிரஸ் தனது செல்வாக்கை பட்டம் மந்திரி சபையிடம் பயன்படுத்த முடியவில்லை என்பது வருந்தத்தக்கது.

கடந்த ஒன்பது மாதங்களில் பட்டம் சர்க்கார், எந்தப் பிரச்சினைக்கும் காங்கிரசைக் கலந்தாலோசிக்கவில்லை.

நிலைமை அப்படியிருக்க, சட்ட சபைக்குள்ளும் வெளியிலும், பட்டம் சர்க்கார் எல்லா முக்கிய பிரச்சினைகளிலும் காங்கிரசின் யோசனை கேட்கப்படுகிறது என்ற எண்ணத்தை மக்களிடை நிலவச் செய்ய முனைந்து வந்திருக்கிறது. காங்கிரஸ் முழுவதாக ஒரு எதிர்க் கட்சியாயில்லாததினல், சர்க்கார் செய்கிற தவறுகளையும், ஒழுங்கீனங்களையும் கண்டிக்க இயலாது போய்விட்டது.

இந்த நிலையால், காங்கிரஸ், நாட்டில் நாளுக்கு நாள் செல்வாக்கிழந்து வருவதாகக் கருதுகிறோம்.

மேலும், பதவியேற்ற அன்றிலிருந்தே முதன் மந்திரியும், இதரர்களும், காங்கிரஸ்நிறுவனத்தைக் குறை கூறியும், இழித்தும் பழித்தும் பேசவும் ஆரம்பித்துவிட்டனர்.

சமீபத்தில், முதன்மந்திரி பட்டம் தாணுபிள்ளை, "இன்னும் இரண்டாண்டுகள் ம. சோ. மந்திரி சபை திரு-கொச்சியில் நீடிக்குமானல், காங்கிரஸ் கட்சி அழிந்து படும் ; அப்போது எல்லாக் காங்கிரஸ்காரர்களையும் ம. சோ. கட்சியில் சேருமாறு அழைப்பேன்," என்று கூறியுள்ளதின் மூலம், காங்கிரசைத் தூற்றும் பணி உச்சம் பெற்றுள்ளது.

நிர்வாகக் கமிட்டிகளில் காங்கிரசுக்குப் போதுமான இடங்கள் தரவில்லை. இதனல் மக்களிடையே, 'காங்கிரஸ், 'சக்தி' இழந்துவிட்டது,' என்ற எண்ணம் பரவி வருகிறது.

சர்க்கார் சமீபத்தில் துவங்கிய நான்கு தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களும், காங்கிரஸ் அல்லாத உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட] தொகுதிகளிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதில் சர்க்கார் அதிக கவனம் செலுத்தியிருக்கிறது.

திருவனந்தபுரம் நகர சபையிலும், ம. சோ. கட்சியினர், காங்கிரசல்லாதாருடன் சேர்ந்து கொண்டு, காங்கிரஸ் எந்த ஒரு நிர்வாக இடத்தையும் பெறமுடியாதவாறு செய்து வந்துள்ளனர்.

தொழிலாளர் முகாமிலும், தேசிய தொழிற் சங்கங்கள் அழிந்துபடும் வகையிலேயே ம. சோ. கட்சி அரசாங்கம் நடந்து கொண்டுள்ளது.

இந்தக் காரணங்கள்தான் காங்கிரஸ் தொடர்ந்து ம. சோ. கட்சியின் பட்டம் தாணு சர்க்காருக்குத் தனது ஆதரவைத் தர இயலாது செய்து வந்துள்ளதாகும் என்று தீர்மானம் கூறுகிறது.

ஆல்வாயில் தொழிலாளர் மீது போலீசார் தடியடிப் பிரயோகம்

5 பெண்கள் உட்பட 30 பேருக்குக் காயம்

15 பெண்கள் உட்பட 50 பேர் கைது

திருச்சூர், டிச. 11—

ஆல்வாயில் உள்ள துணி மில் ஒன்றின் முன்னிலையில் மறியல் செய்த தொழிலாளர் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர் ; இதனல் 5 பெண்கள் உட்பட 30 பேர் காயமுற்றனர் என்று தெரிகிறது.

அசோகா டெக்ஸ்டைல் மில்லிற்குள் புதிதாக வேலைக்கு சேர்க்கப்பட்ட தொழிலாளர்களைப் போலீசார் அழைத்துக்கொண்டு செல்லும்போது, தொழிலாளர்கள் போலீசாரைத் தடுத்தனர் என்றும், அதனல் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர் என்றும் தெரிகிறது.

போனஸ் தேவை என்றும், அதிக கூலி தேவை என்றும் 750 தொழிலாளர்கள் இந்த மில்லில் பொது வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

இந்த வேலை நிறுத்தத்தை ஆதரித்து, ஆல்வாயில், சென்ற வாரம் 2000 தொழிலாளர்கள் அனுதாப வேலை நிறுத்தம் செய்தனர்.

தடியடிப் பிரயோகத்திற்குப் பின்னர் போலீசார் 15 பெண்கள் உள்பட 50 பேரை காவலில் வைத்துள்ளனராம்.

தற்காப்பு இலாகா ஊழியர்கள்

கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் ?

இந்தியா பூராவிலுமுள்ள தற்காப்பிலாகா ஊழியர்கள், தங்களுக்குத் தரப்படும் பிரயாணப்படி, சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளுக்கு சர்க்கார் இணங்காவிடில், ஊழியர்கள் இரண்டு இலட்சம் பேரும் ஒரு பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் என தற்காப்பிலாகா ஊழியர் சங்கச் செயலாளர் என். எம். ஜோஷி இங்கு தெரிவித்திருக்கிறாராம்.

'ராமாயணத்'திற்கு கரூரிலும் தடை!

கரூர், டிச. 12—

கரூர் நகர எல்லையில் தோழர் எம். ஆர். இராதா அவர்களின் 'இராமாயண' நாடகத்தை நடத்துவது கூடாது என்று நகர ஸ்டேஷனரி சப்-மாஜிஸ்திரேட் வி. ரெங்கராஜு கி. பு. கோ. 144-வது பிரிவின்படி தடை உத்திரவு பிறப்பித்திருக்கிருர்.

இந்த உத்திரவு டிசம்பர் 11-ந் தேதி முதல் ஒரு மாதம் அமுலில் இருக்குமென்று தெரிகிறது.

எம். ஆர். இராதா, அவரது குழுவினர், அவரது ஆதரவாளர்கள் யாரும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் இவற்றை நடத்துவதை இந்த உத்திரவு தடை செய்கிறது.

[குறிப்பு : திருச்சியில் விதிக்கப்பட்டிருந்த தடை உத்திரவை மீறப்போவதாக தோழர் எம். ஆர். இராதா, பத்திரிகைகளுக்கு அறிவித்திருந்தார் ; இப்போது அவர், தடை உத்திரவை மீறவில்லை.]

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணுதுரை

சென்னை 13–12–1954 திங்கள்

யாருக்கு விதிப்பது?

தோழர் எம். ஆர். இராதா நடித்துவரும் இராமாயண நாடகம், இங்குள்ள மக்களுள் ஒரு சிறு சுயநல கும்பலின் உள்ளத்தில், அச்சத்தையும், திகைப்பையும் மூட்டி இருக்கிறது என, ஆட்சியாளர்கள் நம்பும் அளவிற்கு, அக்கும்பலின் விஷமச் செயல்கள் இருந்து வருகின்றன. அச்சிறு தொகையினருக்கு மட்டுமல்லாமல், இந்து மதத்தைச் சார்ந்தவர்களெனச் சொல்லிக்கொள்ளப்படும் மக்கள் அனைவருடைய மத உணர்வும், அந்த நாடகத்தால் புண்பட்டுக்கிடப்பதாகவும், அச்சிறு கூட்டம் ஓயாமல் ஒப்பாரி வைத்தும் வருகிறது. இது வெறும் போலி—நம்பத்தகாத கற்பனை என்பதை, மேற்படி நாடகத்திற்குக் கிடைத்துவரும் பொது மக்கள் ஆதரவு, விளக்கம் தந்த வண்ணம் உள்ளது.

மேற்படி நாடகத்தினல் 'இந்து'க்களின் மனம் புண்படுகிறது என இவ்விஷமிகள் கூறும் கூற்றில் உண்மை இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும், தாங்களும் இந்துக்கள்தான் எனச் சொல்லிக்கொள்ளும் மற்ற மக்களுக்கெல்லாம் ஏற்படாத வெறுப்பும் கோபமும், இச்சிறு கூட்டத்திற்கு மட்டும் ஏற்படக் காரணம் என்ன? மற்றவர்கள், மேற்படி நாடகத்தைக் குறித்து வாய் திறக்காமல் இருக்கும் வேளையில், இச்சிறு கூட்டம் மட்டும், நாடகத்திற்கு எதிராக மாரடித்துக்கொண்டு அழக்கிளம்புவானேன்?

அந்த நாடகம் மத உணர்வைப் புண்படுத்துகிறது; நாடகத்திற்குத் தடை விதிக்கவேண்டும்; அந்நாடகத்தை நடிக்கும் நடிகர்களைக் கடுமையாக தண்டிக்கவேண்டும் என்றெல்லாம், ஆட்சியாளர்களுக்கு, இச்சிறு கூட்டம் எச்சரிக்கைகளுக்கு மேல் எச்சரிக்கை விடுத்த வண்ணம் உள்ளதே, அது ஏன்? இக்கேள்விகளுக்குக் கிடைக்கப்பெறும் விடையில் தான், அச்சிறு கூட்டத்தினர் கிளர்ச்சியின் முழு இரகசியமும் அடங்கி உள்ளது. நிற்க,

இச்சிறு கூட்டத்தின் கிளர்ச்சிக்கு எது காரணமாக இருந்த போதிலும் இருக்கட்டும். இக்கும்பலின் எதிர்ப்புக்குக் காரணமாக இருக்கிற இராமாயண நாடகத்தில், 'இந்துக்களி'ன் மனதைப் புண்படுத்தும் தன்மை, இக்கும்பல் குறைபடுவது போன்றே இருப்பதாகவும் விவாதத்திற்காக ஒப்புக் கொள்வோம். உண்மை நிலை இதுவானல், மேற்படி நாடகத்தின் மூலம் நாடகப் பொறுப்பாளர், இன்ன சட்டப் பிரிவின் கீழ் குற்றமிழைத்திருக்கிருர் என, அவர் மீது வழக்குத் தொடுத்திருக்க வேண்டியது அன்றே ஆட்சியாளர்களின் நீங்காக் கடமையாகும். அதை, இந்த ஆட்சியாளர்கள் இதுவரை செய்ததுண்டா? ஏன் அத்தகு நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஆட்சியாளர்கள் முன்வரவில்லை?

மேற்படி நாடகத்தை ஒரேயடியாக நடிக்க விடாமல் தடுத்துவிட ஆட்சியாளர்கள் கட்டளை பிறப்பித்தார்கள் என்பதும், அக்கட்டளை உயர்நீதி மன்றத்தால் செல்லத்தகாதது என ஆட்சியாளர்களுக்கு எதிராகத் தீர்மானிக்கப்பட்டு விட்டது என்பதும் நமக்குத் தெரியும்.

நாடகத்தையே நடிக்க விடாமல் தடுப்பதற்கு, நடைமுறையில் உள்ள சட்டத்தில் இடமில்லை என்று ஏற்பட்டதும், மேற்படி நாடகத்தில் கிரிமினல் சட்ட விதிகளுக்கு உட்பட்ட ஆட்சேபகரமான அம்சங்கள் இருக்குமானல், அவைகள்மீது சட்டப்படி வழக்குத் தொடர்வதை அல்லவோ ஆட்சியாளர்கள் உடனடியாக மேற்கொண்டு இருக்க வேண்டும்? ஏன் அதைச் செய்வதற்குப் பதிலாக, மேற்படி நாடகத்தை ஒரு புகலாக வைத்துக்கொண்டு, வறுமையால் தாக்குண்டு கிடக்கும் சில பலர் அமைதியைக் குலைக்க முனையுமாறு விட வேண்டும்?

விவாதத்திற்குரிய இராமாயண நாடகத்தில், மத உணர்வைப் புண்படுத்தும் பகுதியின் மீது வழக்குத் தொடர கிரிமினல் சட்டத்தில் விதி இல்லையோ என எவரும் எண்ணத் தேவையில்லை. இ. பி. கோ. 295-(அ) பிரிவு இதைத்தான் வலியுறுத்துகிறது. 'இந்தியக் குடி மக்களுள் ஏதாவது ஒரு வகுப்பின் மத உணர்வைப் புண்படுத்தும் நோக்குடன், சொல்லாலும், எழுத்தாலும், கண்களுக்குப் புலனுகும் காட்சிகளாலும், மதத்தை அவதூறு செய்தாலோ, அவ்வாறு செய்ய முயற்சித்தாலோ, இரண்டாண்டு காலம் சிறை தண்டனை விதிக்கவும், அபராதம் போடவும், அல்லது தண்டனையும் அபராதமும் சேர்த்து விதிக்கவும் அதிகாரமுண்டு' என மேற்படி சட்டத்தின் விதி விளக்கம் தருகிறது. இதே விதியின் சாரத்தைத்தான் புதிய நாடகக் கட்டுப்பாடு மசோதாவில் ஆட்சியாளர்கள் சேர்த்து இருக்கின்றனர். நிற்க,

இந்த விதியின்படி, இராமாயண நாடகப் பொறுப்பாளர் மீது ஆட்சியாளர்கள் வழக்குத் தொடுத்திருந்தால், அவ்விதியில் கூறப்படும் குற்றம் அந்த நாடகத்தில் இருக்கிறதா இல்லையா என்பதை நீதிமன்றம் தீர்மானித்துவிட்டிருக்கும். அதன் விளைவாக, நீதிமன்றம் குறிப்பிடும் குற்றப்பகுதியை விலக்கிவிட்டு, இராமாயண நாடகத்தைத் திருத்தம் செய்து நடிக்க, நாடகப் பொறுப்பாளருக்கு ஒரு வாய்ப்பும் கிடைத்திருக்கும். இப்பொழுது நாடகத்திற்கு எதிராகக் கொக்கரிக்கும் சிறு கும்பலின் கொட்டமும் அடங்கிவிட்டிருக்கும்.

இதுதான் நியாயம். இதைத்தான் ஆட்சியாளர்களும் பின்பற்றி இருக்கவேண்டும். ஆனல் ஆட்சியாளர்கள் இந் நேர்மையான முறையை மேற்கொள்ளாது, வேண்டுமென்றே இருந்துவிட்டிருக்கின்றனர். சட்டத்தில் வாய்ப்பு இருந்தும் வசதி இருந்தும்கூட, அதைமேற்கொண்டு, இராமாயண நாடக உரிமையாளருக்கும் மற்றவர்களுக்கும் ஒரு தெளிவான பாதையைக் காட்டவேண்டிய ஆட்சியாளர்கள், ஏன் அவ்வாறு செய்யாது, செயலற்றுஇருந்துவிட்டார்கள் என்பது ஆராய்ச்சிக்குரியதாகும்.

சட்டத்தில் மேற்குறித்த விதி இருப்பது தெரியாததினல், இராமாயண உரிமையாளர் மீது வழக்குத் தொடராமல் இருந்துவிட்டார்கள் எனச் சொல்ல முடியாது. வேண்டுமென்றே ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் ஆட்சியாளர்கள், அவ்வாறு நடவடிக்கை எடுக்காது இருந்திருக்கிருர்கள் என்பது, அவர்கள் செயலால் தெரியவருகிறது. என்ன அது?

இராமாயண நாடகத்தை ஒரேயடியாகத் தடுத்துவிட சட்ட புத்தகத்தில் அதற்கான வழி இல்லை. இருக்கும் வழியைக் கொண்டு வழக்குத் தொடுக்கவோ, ஆட்சியாளர்களுக்கு விருப்பமில்லை. இத்தகைய சூழ்நிலையில் இராமாயண நாடகத்தில் இருப்பதாக ஒரு சிறு சுயநலக் கும்பலால் சுட்டிக் காட்டப்படும் குறைபாடுகள், சட்டப்படி ஒப்புக் கொள்ளத் தக்கதல்ல. அக்கும்பலின் குற்றச்சாட்டு, அதன் சொந்தக் கருத்தே அல்லாது வேறு ஒன்றுமில்லை. அதைப் பொருட்படுத்தி, இராமாயண நாடகம் நடிப்பதைக் கைவிட வேண்டிய கட்டாயம் அதன் உரிமையாளருக்கும் ஏற்படவில்லை. எனவே, அவர் விரும்பியவாறு மேற்குறித்த நாடகத்தை நடிக்க அவருக்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையைத் தடுக்க, மற்றவர்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. அதைத் தடுக்க வேண்டுமென, மற்றவர்கள் மறியல் செய்வோம் என அச்சுறுத்துவதும், மறியல் போர்வையில் பலாத்காரத்தில் இறங்குவதும், சட்ட விரோதமானதேயாகும். எனவே, சட்ட விரோதமான பலாத்காரச் செயலை மேற்கொள்ளுகிறவர்களைத் தடுத்து நிறுத்தி, இராமாயண நாடக உரிமையாளரின் செயலாற்றும் உரிமையைப்பாதுகாக்க ஆட்சியாளர்கள் முன்வந்திருக்க வேண்டும். அதற்காக சட்ட விரோதமான செயலில் ஈடுபடத் தயாராக இருக்கும் கூட்டத்தை, சட்ட மூலம் தடை விதித்து தடுத்திருக்க வேண்டும்; இதுதான் முறை.

ஆனல், ஆட்சியாளர்களோ, சட்ட ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு நடக்கும் ஒரு நாடகத்தை நடத்தக் கூடாது எனத் தடை விதிப்பதின் மூலம், ஒரு தனி நபரின் அடிப்படை உரிமைக்கு உலை வைத்து இருக்கிருர்கள். அதுவுமன்றி, குறிப்பிட்ட சிலருக்குப் பிடிக்காத ஒரு நாடகத்தை, ஆட்சியாளர்களைக் கொண்டு தடுத்துவிட வேண்டுமென இனி யாராவது சிலர் கருதினலும், அவர்கள் மறியல் செய்யப்போவதாக அச்சுறுத்தினலே போதும், அந்த நாடகத்தை ஆட்சியாளர்கள் தடுக்க முன்வந்துவிடுவர் என்ற ஒரு முன்மாதிரி செய்கைக்கும், ஆட்சியாளர்களின் போக்கு இடம் கொடுத்துவிட்டிருக்கிறது. ஆட்சியாளர்களின் பிரஸ்தாபச் செய்கையில் உள்ள முன்மாதிரியைக் கொண்டு, சிறு கும்பலின் கருத்துக்குகந்த நாடகங்கள் ஒவ்வொன்றுக்கும் தடை விதிக்க ஆட்சியாளர்களைப் பணிய வைக்க, மற்றவர்களாலும் முடியும் என்ற எண்ணத்தை பொதுமக்களிடம் உண்டாக்குவதாகவும் இருக்கிறது. இத்தகைய ஒரு எண்ணத்தைப் பொதுமக்கள் கொள்ளுமாறு ஆட்சியாளர்கள் நடந்து கொண்டு இருப்பது, அவர்களுக்கும் நல்லது அல்ல—நாட்டு மக்களுக்கும் உகந்ததல்ல. எனவே, செய்த தவறை உடனடியாகத் திருத்திக் கொள்ள முன் வருமாறு ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொள்ளுகிருேம்.

இராமாயண நாடக உரிமையாளர் மீது சட்டப்படி வழக்குத் தொடராது ஆட்சியாளர்கள் இருந்துவிட்டதற்கே, யாராவது பிரஸ்தாப நாடகத்துக்கு எதிராக பலாத்காரத்தில் ஈடுபட முன்வரட்டும், அதைக் கொண்டு 'அமைதிக்குப் பங்கம் ஏற்படக் கூடும்' எனக் காரணங்காட்டி, ஒரேயடியாக நாடகத்தையே நடிக்கவிடாமல் தடுத்துவிடலாம் என்பதே, அவர்களின் உள் எண்ணமோ என்றுகூட நினைக்க இடமுண்டு. இராமாயண நாடகத்திற்குப் போடப்பட்டுள்ள தடை உத்தரவு சம்பவர், மேற்குறித்துள்ள ஆட்சியாளர்களின் உள் எண்ணத்தைத் தான் ஒப்புவதாக இருக்கிறது.

ஆட்சியாளர்களின் இந்தத் தவறிய போக்கிற்கு மற்றொன்றையும் காரணமாகக் கூறலாம். அதாவது, புதிய நாடகக் கட்டுப்பாடு மசோதாவைப் போன்ற ஒரு மசோதா தேவைஎன பலர் நினைக்குமாறு செய்யவும், திருத்தம் எதுவும் செய்யாமல் அதை அப்படியே சட்டமாக்கிவிட சட்ட சபை உறுப்பினர்களை உடன்படச் செய்யவும், ஒரு சூழ்நிலையை நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்பதே ஆட்சியாளர்கள் குற்றமுள்ள நடத்தைக்கு மற்றொரு காரணமாகும்.

அரசியல் தலைவர்களின் உறவு முறையை விளக்கமாகத் தெரிந்துகொண்டு இருப்பவர்களுக்கு, மேற்கூறிய காரணத்தில் மறைந்திருக்கும் உண்மை தெளிவாகத் தெரியுமென்பதில் ஆட்சேபணை இருக்க முடியாது.

"கட்சியில் உறுப்பினர் என்ருல் நாச வேலையில் ஈடுபட்டார் என்பது பொருள் அல்ல"

"நூல் நிலைய அலுவலாளர்களும் குற்றவாளியாகும் நிலை ஏற்படும்"

இரயில்வே ஊழியர் வழக்கில் நீதிபதியின் கருத்து

"தென் இந்திய இரயில்வே தொழிலாளர் கழகத்தில் உறுப்பினராக இருப்பதோ, அல்லது கம்யூனிஸ்டு கட்சியில் உறுப்பினராக இருப்பதோ சட்ட விரோதமானது அல்ல,"

என்று, நீதிபதி பி. வி. பாலகிருஷ்ணய்யர், சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றில் தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டார்.

தென் பிராந்திய இரயில்வே ஜெனரல் மானேஜர், ஆர். அனந்தநாராயணன் என்பவரை போதுமான காரணமின்றி வேலையிலிருந்து 'சஸ்பெண்ட்' செய்தார்; அதை எதிர்த்து அனந்தநாராயணன் சென்னை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

அனந்தநாராயணன், இரயில்வே உதவி-பிரிட்ஜ் இன்ஸ்பெக்டராவார்.

அவர், நாச வேலையில் ஈடுபடுகிருர் என்று பொதுவாகக் குற்றம் சாட்டப்பட்டு, தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவைக்கப்பட்டார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பாலகிருஷ்ணய்யர், "கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களில பலர் சட்ட விரோதமாக நாச வேலையில் ஈடுபட்ட குற்றங்களுக்கு ஆளாகியிருந்தாலும், அக்கட்சியில் உறுப்பினராக இருக்கிற காரணத்தினலேயே ஒருவர், நாச வேலைகளில் தொடர்பு கொண்டிருப்பதாகக் கூற முடியாது," என்று குறிப்பிட்டார்.

"அக்கட்சியில் தொடர்பு கொண்டிருப்பதாலேயே நாச வேலைகளில் ஈடுபட்டிருப்பதாகவோ அல்லது அவற்றைத் தாண்டி விடுவதாகவோ கூற முடியாது," என்று நீதிபதி மேலும் குறிப்பிட்டார்.

மனுதாரின் மீதுள்ள குற்றச்சாட்டுகள் தெளிவற்று இருப்பதாகவும், சர்க்கார், ரயில்வே நிர்வாகம் இவைகளை கண்டிப்பதால், துவேஷத்தையும் வெறுப்பையும் பரப்புவதாகாது என்றும் நீதிபதி மேலும் குறிப்பிட்டார்.

"மனுதார், கம்யூனிசக் கொள்கைகளை பொதுமக்களிடையேயும், ரயில்வே ஊழியர்களிடையேயும் பரப்பினுர்," என்ற குற்றச்சாட்டு பற்றி நீதிபதி குறிப்பிடுகையில், "எப்படி அவர் இக்கொள்கையைப் பரப்பினுர் என்ற கேள்விக்கு குற்றச்சாட்டில் பதில் ஏதும் இல்லை; இந்தக் குற்றச்சாட்டு அசாதாரணமானது" என்று குறிப்பிட்டார்.

"இது போன்ற குற்றச்சாட்டுகளில் ஒருவர் தண்டிக்கப்பட்டால் கல்லூரிகலும், பல்கலைக் கழகங்களிலும் உள்ள நூல் நிலைய அதிகாரி ஒவ்வொருவரும் குற்றவாளிகள் ஆவார்கள்," என்ருர்.

"அவர்கள், கார்ல் மார்க்ஸ் அல்லது எங்கல்ஸ் போன்ருரின் புத்தகங்களை மற்றவருக்குப் படிக்கக் கொடுப்பது கம்யூனிசத்தைப் பரப்புவதாகும் என்று கருதப்பட்டு, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படலாம்,' என்றும் நீதிபதி குறிப்பிட்டார்.

இறுதியில் நீதிபதி, "இது போன்ற குற்றச்சாட்டுகள் சரியான முறையில் இருக்க வேண்டுமென்றும், மனுதாரின் சமாதானத்தைக் கேட்டு, பின்னர் முடிவு செய்து, அதன் பின்னர்தான் என்ன தண்டனை அளிக்கவேண்டுமென்ற பிரச்சினைக்கு வர வேண்டும்," என்று கூறினுர்.

இறுதியில் நீதிபதி, ரயில்வே ஜெனரல்-மானேஜரின் உத்தரவை ரத்து செய்தார்.

தொழில் வளம் பெருக

ரூ. 25 கோடி மூலதன வசதி

இந்தியாவில் தொழில் வளம் பெருக நிதி வசதி அளிக்கக்கூடிய தொரு நிறுவனம் அடுத்த மாதம் நிறுவப்படும்.

25 கோடி ரூபாய் மூலதனத்துடன் துவங்கப்படும் இந்த நிறுவனத்தில் இந்தியா சர்க்கார், உலக பாங்கி, லண்டனிலுள்ள காமன் வெல்த் அபிவிருத்தி நிதி கம்பெனி ஒரு சில அமெரிக்க முதலாளிகள் ஆகியவர்கள் பங்குதாரர்களாக இருப்பார்கள்.

சாகோவும், மரவள்ளிக் கிழங்கும் ஒரே 'தரம்' அல்லவாம்!

மரவள்ளிக் கிழங்கின் மணிகள் குழந்தைகளின் உணவாகாதாம்!

கல்கத்தா வழக்கில் நிபுணரின் கூற்று

'சாகோ' என்ற பெயரில் மரவள்ளிக் கிழங்கின் தயாரிப்புகளை விற்றதாக கல்கத்தா நீதிமன்றத்தில் முன்னர் தொடரப்பட்ட வழக்கில் சாட்சியமளிக்கையில், டாக்டர் சௌத்திரி என்பவர், 'மரவள்ளிக் கிழங்கின் தயாரிப்பு குழந்தைகளின் உணவாகாது,' என்று கூறினர்.

'சாகோ'வினல் செய்யப்பட்ட சவ்வரிசியும், மரவள்ளிக் கிழங்கினல் செய்யப்பட்ட சவ்வரிசியும், தரத்தில் ஒரே தன்மையுடையது அல்லவென்றும்,சாகோவும்,மரவள்ளிக் கிழங்கும் வேறுவேறு தன்மையுடையனவென்றும், நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கையில் டாக்டர் சௌத்திரி கூறினர்.

கல்கத்தா தாமோதர தாஸ் கம்பெனியார் மீது, மரவள்ளிக் கிழங்கு உருண்டைகளை 'சாகோ' என்று விற்பனை செய்தனரெனத் தொடரப்பட்ட வழக்கில், சாட்சியம் அளிக்கையில் டாக்டர் சௌத்திரி மேற்கண்டவாறு கூறினர்.

'சாகோ' என்பது, உணவு தானியங்களின் வரிசையில் வருவதாகவும், அது 'சாகோ' மரத்தின் சோற்றிலிருந்து செய்யப்படுவதாகவும், மரவள்ளிக் கிழங்கு என்பது 'கார் போ ஹைட்ரேட்' என்னும் உணவென்றும், இது 'டாபியோகா' என்னும் மரவள்ளிக் கிழங்கின் சாற்றிலிருந்து செய்யப்படுவதாகவும் அவர் கூறினர்.

டாக்டர் சௌத்திரி, குழந்தை நோய்களின் நிபுணர்—எப். ஆர். சி. எம்., பட்டம் பெற்ற அவர், கல்கத்தா பல்கலைக் கழக சிண்டிகேட்டில் உறுப்பினர் ஆவார்.

இந்த வழக்கு கல்கத்தா நான்காவது முனிசிபல் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நடைபெறுகிறது.

குழந்தைகளின் உணவாக மரவள்ளிக் கிழங்கின் மணிகளை, தான் அனுமதித்தது கிடையாது என்று அவர் மேலும் கூறினர். இத்துறையில் தான் நிபுணர் என்று அவர் குறிப்பிட்டார்.

உலகின் எப்பகுதியிலும் மரவள்ளிக் கிழங்கிலிருந்து செய்யப்பட்ட பொருளை 'சாகோ' என்று அழைப்பதில்லை என்றும் வெளிநாடுகளில் உள்ள மருத்துவ நிலயங்களில் இதை குழந்தைகளின் உணவாகப் பயன்படுத்துவதை தான் பார்த்தது கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வங்காளத்தில் உணவு தானிய வகையின்கீழ் இருக்கிறதென்ற காரணத்தால், 'சாகோ' என்னும் சவ்வரிசியை குழந்தைகளுக்கு உணவாகப் பயன்படுத்துகிறார்கள் என்றும், மரவள்ளிக் கிழங்கின் மணிகளை குழந்தைகளின் உணவாகப் பயன்படுத்துவது கிடையாது என்றும் குறிப்பிட்டார்.

மரவள்ளிக் கிழங்கிலிருந்து 'சாகோ' என்னும் சவ்வரிசி செய்யப்படுகிறது என்பது சரியல்லவென்றும், அதன் மணிகளை 'சவ்வரிசி' என்று அழைக்கக் கூடாதென்றும் அவர் கூறினர்.

மரவள்ளிக் கிழங்கில், 'ஹைட்ரோசையானிக் ஆஸிட்' இருக்கிறதென்று தான் படித்திருப்பதாகவும், இந்தத் திராவகம் உள்ள பொருளை தொடர்ந்து உட்கொண்டால் அது தீமை பயக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'சாகோ' சவ்வரிசி, சமைத்த பின்னர் ஒரேமாதிரியாக இருக்குமென்றும், ஆனல் மரவள்ளிக் கிழங்கின் மணிகள் கட்டியாகி விடும் தன்மையுடையன என்றும் டாக்டர் சௌத்திரி மேலும் குறிப்பிட்டார்.

காங்கிரஸ்காரர் தேர்தல்

செல்லாதென தீர்ப்பு

புதுடில்லி, டிச. 9—

மத்திய பிரதேச மாநிலத்தின் ஹோஷங்காபாத் தொகுதியிலிருந்து மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் சையத் அகமத் இசக் என்ற காங்கிரஸ் உறுப்பினரின் தேர்தல் செல்லாதெனவும் மறு தேர்தல் நடத்த வேண்டுமெனவும் இந்திய தலைமை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவரை எதிர்த்து நின்று தோற்ற தோழர் எச். வி. காமத் என்பவரின் அப்பீல் மனுவின் பேரிலேயே இத்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

முதலில், தேர்தல் 'டிரிபியூனல்' தமது ஆட்சேபனை மனுவை நிராகரித்ததை எதிர்த்து தோழர் காமத் உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்தார். அங்கும் அவரது மனு நிராகரிக்கப்படவே, அந்தத் தீர்ப்பையும் எதிர்த்து இந்தியத் தலைமை உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்துகொண்டதின்பேரில், அங்கு, தேர்தலை செல்லாதெனவும் புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனவும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வெற்றிலை மீதுள்ள விற்பனை வரி....

நீக்கிவிடக்கோரி ரெவின்யூ அமைச்சரிடம் தூது

வெற்றிலை மிகவும் சீக்கிரத்தில் அழிந்துபோகக்கூடியது என்றும், அதனை காய்கறிகளுடன் சேர்த்து விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்றும் கோரி, சென்னை ரெவின்யூ அமைச்சர் மாணிக்கவேலு நாயக்கரிடம் தோழர்கள் சுயம்பிரகாசம், பி.கே. மூக்கையா தேவர், எம் பி. சுப்பிரமணியம் ஆகிய சட்டசபை உறுப்பினர்களும், சென்னை மாகாண வெற்றிலை வியாபாரிகள் சங்கத் தலைவர் ஈ. ஏ. அபூபக்கர் ராவுத்தர், செயலாளர் எஸ். சூரியநாராயணன், மற்றும் ஏ. டி. சியாஜியுதீன், ஆர். எஸ். ஜக்கரையா சாகிப் ஆகியோர் அடங்கிய குழுவினர் மகஜர் ஒன்றைத் தந்தனர்.

காய்கறிகளைவிட வெற்றிலை சீக்கிரத்தில் அழிந்து போகும் தன்மை உடையது என்றும், இத்தொழிலில் ஈடுபட்டிருப்போர் ஏழைகள் என்றும், இவர்களில் பலருடைய மூலதனமே பத்து ரூபாய்கள்தான் என்றும், ஆகவே, வெற்றிலைக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டியது நியாயமானதே என்றும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரயில்வேக்களில் வெற்றிலை சீக்கிரம் அழிந்துபோகும் பொருளாகவே குறிப்பிடப்படுகிறது என்றும் மகஜரில் எடுத்துக்காட்டப்படுகிறது.

வெற்றிலை மீதுள்ள விற்பனை வரியினல் கிடைக்கும் வருமானம் மிகவும் குறைவென்றும் சென்னை முதல் அமைச்சர் கூறியிருப்பதும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

மகஜரைப் பெற்றுக்கொண்ட அமைச்சர், வெற்றிலை சீக்கிரம் அழிந்துபோகக்கூடியது என்பதை ஒப்புக்கொள்வதாகக் கூறி, இது பற்றி ஆவன செய்வதாக வாக்களித்தார்.

மதுரை மாநாடு

"1955 ஜனவரி 8, 9 தேதிகளில், மதுரையில் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாட்டில் தொண்டர்களாகச் சேர்ந்து பணியாற்ற விரும்பும் கழக தோழர்கள், தங்கள் கிளைக் கழகச் செயலாளர்களின் கையொப்பத்துடன் அறிவித்து தங்கள் பெயரை பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்; வரவேற்புக் குழுவினரின் நிபந்தனைக்குட்பட்டு நடப்பவர்களாக, சேருபவர்கள் இருக்கவேண்டும்; வரவேற்புக் குழுவினர் நிர்ணயிக்கிறபடி தங்கள் சொந்தச் செலவிலேயே உடைகளைத் தைத்துக்கொள்ள வேண்டும்" என்று, மாநாட்டுத் தொண்டர் படைத் தலைவர் பி. கே. சேதுராமன் அறிவிக்கிறார்.

ஜப்பானின் புதிய பிரதமர் தேர்வு

அடுத்தஆண்டில் பொதுத்தேர்தல்

ஜப்பானில் புதிதாக உருவாகியிருக்கும் ஜனநாயகக் கட்சியின் தலைவரான 71 வயதுடைய ஹடோயாமா ஜப்பான் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன், ஷிகேரு யோஷிடாவின் தலைமையிலிருந்த மந்திரி சபை, நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அஞ்சி, ராஜினமாச் செய்தது நினைவிலிருக்கலாம்.

புதிய கட்சியின் பிரதமர் ஹடோயாமா, யோஷிடாவின் லிபரல் கட்சியில் இருந்தவர்தான்; சமீபத்தில்தான் விலகினர்.

யோஷிடாவின் ராஜினமாவுக்குப் பிறகு லிபரல் கட்சியின் தலைவராக டாகேடோரா ஒகாட்டா என்பவர் தேர்வு பெற்றார்.

அவரும் பிரதமர் பதவிக்குப் போட்டியிட்டார்; ஆனல், ஹடோயாமாவுக்கு 257 வாக்குகளும், ஒகாட்டாவிற்கு 191 வாக்குகளும் கீழ்ச்சபையில் கிடைத்தன.

மேல்சபையிலும் ஹடோயாமாவுக்கு 116 வாக்குகளும், ஒகாட்டாவிற்கு 85 ஓட்டுகளும் கிடைத்தன.

ஹடோயாமா தலைமையில் ஒரு 'காபந்து' சர்க்காரே ஏற்படுமாம்.

மேற்கு ஜெர்மனி ஆயுதபாணியானல்...

நான்கு வல்லரசு மாநாடு கூட முடியாது

மேற்கு வல்லரசுகளுக்கு ரஷ்யா எச்சரிக்கை

மேற்கு ஜெர்மனியை மீண்டும் ஆயுதபாணியாக்குவது எனும் எண்ணத்துடன் பாரிசில் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்களை உறுதி செய்த பின்னர் நான்கு வல்லரசுகள் கூடுமானல் அந்த மாநாட்டின் மூலமாய் எவ்விதப் பலனும் ஏற்படப் போவதில்லை யென சோவியத் ரஷ்யா கருத்து தறிவித்துள்ளதல்லவா?

இந்தக் கருத்தைக் குறித்து பாரிசில் கூடும் மூன்று வல்லரசுகளின் அயல் நாட்டு மந்திரிகளும் ஆலோசிப்பர் என்று தெரியவருகிறது.

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய மூன்று வல்லரசுகளுக்கும் ரஷ்யா அனுப்பியுள்ள குறிப்பொன்றில், மேற்கு ஜெர்மனி பற்றிய பாரிஸ் ஒப்பந்தங்கள் உறுதியாகுமானல், நான்கு வல்லரசுகள் மாநாடு நடைபெறுவதே சாத்தியமற்று போகக்கூடும் என எச்சரித்துள்ளதாகக் கூடத் தெரியவருகிறது.

* * *

மேற்கு ஜெர்மனியை மேற்கத்திய வல்லரசுகள் ஆயுதபாணியாக்குவதற்கு எதிர் நடவடிக்கையாக, ரஷ்யாவும் அதன் சார்பு நாடுகளும் தங்கள் படை பலத்தைப் பெருக்கும் என்று அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு ரஷ்யா அனுப்பியுள்ள குறிப்பொன்று கூறுகிறது.

மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்கும் பாரிஸ் ஒப்பந்தம் மூலம், ஆஸ்திரியப் பிரச்சினையில் உடன்பாடு ஏற்படுவதற்குக் குந்தகம் ஏற்படுமெனவும் சோவியத் குறிப்புக் கூறுகிறது.

ஜப்பானின் ... மிக்க ... சோஷலிஸ்டுக் கட்சியின் ஆதரவைப் பெறும் பொருட்டு, ஹடோயாமா அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடத்தச் சம்மதித்துள்ளாராம்.

சென்னையில் திராவிடர் திருநாள்

சென்னையில் திராவிடர் திருநாள் விழாவை,வருகிற 1955 ஜனவரி 14-ம் நாளன்று வெகு சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகின்றன.

திருநாளன்று பலவித விளையாட்டுப் பந்தயங்களும், கேளிக்கைகளும், இசை நாடக அரங்கமும், கருத்து விருந்தும் இடம் பெறவிருக்கின்றன.

விளையாட்டுப் பந்தயங்கள், பெரியவர்களுக்கு (சீனியர்); 12 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கென இரண்டு பிரிவாக நடைபெறும்.

ஒரு மைல் ஓட்டம், அரை மைல் ஓட்டம், சைக்கிள் வேகப் பந்தயம், மெதுவாக சைக்கிள் விடுதல், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், கோணிப் பந்தயம்,(சாக்ரேஸ்) இரும்பு குண்டெறிதல், கழுதையும் வாலும்,விசித்திர ஆடைப் போட்டி ஆகியவைகளில் பெரியவர்கள்பங்கு பெறலாம்.

ஒரு பர்லாங் ஓட்டம், அரை பர்லாங் ஓட்டம், 'இசை நாற்காலி' (மியூசிக் சேர்) போட்டி, தாவி ஊன்றுதல் ஆகிய வற்றில் சிறுவர்களும், 100 கெஜ ஓட்டப்பந்தயம், எலுமிச்சம் பழம்—கரண்டி, 'இசை நாற்காலி', ஊசியும் நூலும் முதலியனவற்றில் சிறுமிகளும் கலந்து கொள்ளலாம்.

பந்தயங்களில் முதற் பரிசு பெறுபவர்களுக்கு, தி. மு. கழகச் சொற்பொழிவாளர் வெள்ளிக் கோப்பைகள் பரிசளிக்கச் சம்மதித்துள்ளனர்.

மூன்று பந்தயங்களில் ஒருவரே முதற் பரிசு பெற்றால் அவருக்கு பொதுச்செயலாளர் அண்ணதுரை அவர்கள் விசேஷ வெள்ளிக் கோப்பை ஒன்று பரிசளிக்க ஒப்புதல் தந்துள்ளார்,என்பதைத் தெரிவிக்க மகிழ்கிறோம்.

போட்டிகளில் கலந்து கொள்ளுபவர்கள், கழகத் தோழர்களாயிருக்க வேண்டும்.

போட்டியில் கலந்து கொள்பவர்கள், டிசம்பர் 31-ந் தேதிக்குள் போட்டி நுழைவுக் கட்டணமாக 8 - அணவும், சிறுவர் சிறுமிகள் 4 - அணவும், சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளரிடம் செலுத்தி அங்கீகாரம் பெற வேண்டும்.

ஆறு வயதுக்குட்பட்ட சிறுவர்-சிறுமியர்கள் கட்டணமின்றிக் கலந்துகொள்ளும் 'சித்திரப் போட்டி' ஒன்றும், மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளின் 'அழகு போட்டி' ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த கிளைக் கழகங்களுக்கென 'நாடகப் போட்டி' ஒன்றும் நடைபெறும். நாடகம் 15 நிமிடத்திற்குள் அடங்குவதாயிருக்கவேண்டும். பங்கு பெற விரும்பும் கழகங்கள், அவர்கள் நடிக்கும் நாடகத்திற்குத் தேவையான உபகரணங்களை (ஒலி, ஒளி, சீன், மேடை தவிர) அவர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

சிறந்த நாடகத்திற்கும், நடிப்பிற்கும் பரிசுகள் உண்டு. கலந்து கொள்ளும் கிளைக் கழகங்கள், டிசம்பர் 30-ந் தேதிக்குள் சென்னை மாவட்டக் கழகத்திற்கு அறிவித்து விட வேண்டும்.

வனஸ்பதி உற்பத்தி தடை செய்யப்படமாட்டாது!

வனஸ்பதி உற்பத்தியைத் தடை செய்யக்கோரி ஜாலன் சிங்ஹா என்ற காங்கிரஸ் உறுப்பினர் மக்கள்சபையில் கொண்டுவந்த தீர்மானம் தோல்வியுற்றது.

மசோதாவிற்கு ஆதரவாக 49 வாக்குகளும், எதிராக, 52 வாக்குகளும் கிடைத்ததாம்.

திருமணங்கள்

சிவகுருநாதன்—மீனாட்சி

2—12—54ல், பனங்குளத்தில், தோழர் ம. செ. சிவகுருநாதன்—தோழியர் மீனாட்சி பதிவுத் திருமணம் நடைபெற்றது. 5-12-54ல், மணமகன் இல்லத்தில்விருந்துபசாரம் நடைபெற்றது. அதுசமயம்மண மக்களுக்கு அன்பர்கள் பலர் வாழ்த்துப் பத்திரங்களும், பரிசுகளும் வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—பெற்றுக்கொண்டோம்—நன்றி — பொறுப்பாளர்.

கே. கருப்பசாமி—சரோஜா

5—12—54 காலை 9 மணிக்கு, கடம்பூரில் தோழர் கே. கருப்பசாமி—தோழியர் சரோஜா திருமணம் தோழர் ரும. மாரியப்ப (நாடார்) தலைமையில் நடைபெற்றது. மணமக்களுக்குத் தோழர்கள் பலர் வாழ்த்திதழ்கள் வாசித்தளித்தனர். இறுதியில் தோழர் எம். ஆர். ஜனு அவர்கள், 'சீர்திருத்தத் திருமணம் என்பது பற்றி சொற்பொழிவாற்றினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றி—பொறுப்பாளர்.

மாரிமுத்து—பழனியம்மாள்

5—12—54 காலை 10 மணிக்கு தாண்டாரனில், தோழர் ஏ. மாரிமுத்து—தோழியர் எம். பழனியம்மாள் திருமணம் தோழர் ஏ. பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆ. நியாகராஜன், எஸ். ஏ. சந்திரமோகன் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

கே. சுப்பிரமணியம்—பாக்கியம்

சேலம் அரிசிபாளையம் தோழர் கே. சுப்பிரமணியம் பி. ஏ.,—ஓமலூர் தோழியர் பாக்கியம் திருமணம் 5—12—54 காலை 10 மணியளவில் தோழர் ஏ. சித்தையன் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தோழர்கள் இரா. செழியன், டி. கே சீனுவாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சி கருதி ரூ. 3 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

பாலுசாமி—இராசாத்தி

1—12—54 காலை 10 மணிக்கு, கல்லூரணியில், தோழர் பாலுசாமி—தோழியர் இராசாத்தி திருமணம், தோழர் வ. பொ. வடிவேல் தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் வி. மரிய அந்தோணி, மு. ஞானமணி, கே. பி. எம். மின்னடி, கே. சுப்பையா, முத்துராமலிங்கம் ஆகியோர் பேசினர். ஒரிசா கவர்னர் பி. எஸ். குமாரசாமி ராஜா, அ. பொன்னம்பலனர் ஆகியோர் உட்பட பல பிரமுகர்களிடமிருந்து தந்திகள் வந்தன. இத் திருமணத்தின்நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

28—11—54ல் வெப்பலோடை (கெல்லை)யில், தோழர் ஓ. மூக்கையா தலைமையில் தோழர் சண்முகையா—தோழியர் ராஜகனி திருமணம் நடைபெற்றது. கழகத் தோழர்கள் பலர் கலந்துகொண்டனர். தேனீர் விருந்தளிக்கப்பட்டதுடன், அவ்வூர் கழகத்திற்கு மணமகனல் ரூ. 2 அன்பளிப்பளிக்கப்பட்டது.

மின்சாரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

மைசூரில் 12,000 பேர் கலந்து கொள்வர்

பெங்களூர், டிச. 12—

மைசூர் மாநில சர்க்கார் மின்சார இலாகா ஊழியர் சங்கத்தின் நிர்வாகக் குழுக் கூட்டம் இன்று நடைபெற்றபோது, மாநில முழுவதுமுள்ள **12,000** தொழிலாளர்களும், டிச. **27**-ந் தேதி முதல் காலவரையறையின்றி வேலைநிறுத்தம் செய்ய வேண்டு மென தீர்மானமொன்றின் மூலமாகக் கேட்டுக் கொண்டது.

சம்பளம், கிராக்கிப்படி இவைகளின் உயர்வு, தற்காலிக ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக்குதல் போன்றவையே தொழிலாளர்களின் கோரிக்கைகளில் முக்கியமானவையாகும்.

சர்க்கார் நிறுவிய சமரச ஏற்பாடுகள், பலன்தராமல் தோற்றுவிட்டன.

எனவேதான், தொழிலாளர் சங்கம் வேலை நிறுத்த முடிவை மேற்கொண்டுள்ளது எனத் தெரிகிறது.

சுரங்க விபத்து: மத்திய சர்க்கார் விசாரணை செய்யும்

65 பேர் நீரில் மூழ்கி மாண்ட பரிதாபம்

நாகபுரி, டிச. 12—

மத்திய பிரதேசத்தில், நாகபுரிக்கு அருகே உள்ள பராசியா நிலக்கரிச் சுரங்கத்தில் திடீரென வெள்ளம் புகுந்துவிட்டது.

கீழே சுரங்கப் பகுதி ஒன்றில் தண்ணீர் நிரம்பியதால், அப்பகுதியில் வேலை செய்துவந்த 65 பேர் அப்படியே மூழ்கிப் போயினர். ஒருவராவது இன்னும் மீட்கப்படவில்லை. பம்புகளின் மூலம் தண்ணீர் இறைத்தும் பயன் இல்லையாம்.

வெள்ள நீரை வெளியேற்றும் வேலையை சுரங்க அதிகாரி பி. எஸ். கார்வால் மேற்பார்வையிடுகிறார்.

இப்பகுதிக்கு வந்த மத்தியப் பிரதேச அமைச்சர்களான தீனதயாள் குப்தா, சங்கர்லால் திவாரி ஆகியோர் மீட்சி வேலை துரிதமாக நடைபெறுகிறது என்று கூறினர்.

நீரில் மூழ்கிய 65 சுரங்கத் தொழிலாளர்களை உயிருடன் மீட்கலாம் என்ற நம்பிக்கை இப்போது இல்லை.

தண்ணீருக்குக் கீழே அகப்பட்டுக் கொண்ட பரிதாபத்துக்குரிய தொழிலாளர் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 200 வீதம் சுரங்கக் கம்பெனியார் கொடுத்துள்ளனர்.

மத்தியப் பிரதேச சர்க்கார், உடனடி நிவாரணமாக ரூ. 100 கொடுக்க உத்தரவிட்டுள்ளனர்.

மத்திய சர்க்கார் தொழில் அமைச்சர் கந்துபாய் தேசாய் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தனது அனுதாபத்தை தெரிவித்திருக்கிறார்.

இந்த துக்ககரமான நிகழ்ச்சி பற்றி விசாரணை செய்ய மத்திய சர்க்கார் உடனடியாக குழுவொன்றை நியமிக்கும்.

இந்த விசாரணைக் குழுவில் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர், பொதுநல ஊழியர் ஒருவர், சுரங்க நிபுணர் ஒருவர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இதற்கிடையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவ சர்க்கார் எல்லா முயற்சிகளையும் செய்கின்றனர்.

புதிய சாலைகள், பாலங்கள் அமைக்க...

ரூ. 66 லட்சம் செலவில் திட்டம்

சென்னை, டிச. 10—

சென்னை மாநிலத்தில் சாலைகள், பாலங்கள் அமைப்பதற்கான திட்டமொன்றிற்கு மத்திய அரசாங்கம் அங்கீகாரம் தந்துவிட்டதாகத் தெரிகிறது.

திட்டத்தின் மதிப்பு சுமார் ரூ 66.05 லட்சமாகும். இத்தொகை மத்திய அரசாங்க நிதியில் சென்னை மாநிலத்துக்குரிய பங்கிலிருந்து கிடைக்குமென்றும் தெரிகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில், மீஞ்சூர்—காட்டூர்—திருப்பாலைவனம் சாலையில் ரூ. ஒரு லட்சம் செலவில் ஆரணி ஆற்றின் மீது பாலம் கட்டும் திட்டமொன்றும் இதில் சேர்ந்துள்ளதாம்.

250 போலீசார் உண்ணாவிரதம்

கல்கத்தா, டிச. 12—

ஹௌராவில் இன்று சுமார் 250 போலீசார் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்; என்றாலும் அவர்கள், வேலைகளை வழக்கம் போல் செய்து வருகின்றனர் என்று தெரியவருகிறது.

கல்கத்தா ஆயுதந் தரித்த போலீசாருக்கு வருகிற ஏப்ரல் மாதத்தில் சர்க்கார் அறிவிக்கவிருக்கும் சம்பளம், அலவன்ஸ் பற்றிய முடிவு தங்களுக்கும் வழங்கப்படும் என்று சர்க்காரிடமிருந்து அவர்கள் ஒரு உறுதியை கோரியுள்ளனர்.

மேற்கு வங்க அரசாங்கம் இன்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில், போலீசாரின் குறைகள் சம்பந்தமாக, சனிக்கிழமை இரவு சர்க்கார் வெளியிட்ட அறிக்கை, கல்கத்தா போலீசாருக்கும் மேற்கு வங்க போலீசாருக்கும் பொருந்துமென்று அறிவித்துள்ளார்.

மொராக்கோ கலகம்

15 பேர் மரண தண்டனை விதிக்கப்பட்டனர்

59 பேருக்குக் கடுங்காவல்

பிரெஞ்சு மொராக்கோவில் சென்ற ஆண்டு ஆகஸ்டு 26-ம் தேதி கலகம் செய்ததற்காக 15 மொராக்கோ மக்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்களன்றி மற்றும் 59 பேருக்குக் கடுங்காவல் தண்டனையும், கடும் உழைப்பும் விதிக்கப்பட்டது.

சென்ற ஆண்டில் நடைபெற்ற கலவரத்தில் 14 ஐரோப்பியர்கள், 12 மொராக்கோ வாசிகள் கொல்லப்பட்டனர்; 51 பேர் காயமுற்றனர்.

குற்றவாளிகளில் 7 பேர் இன்னும் பிடிபடவில்லை. அவர்கள் இன்றியே தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

ஜப்பானின்

அயல்நாட்டுக் கொள்கை

டோக்கியோ, டிச. 11—

ஜப்பானில், யோஷிடாவின் மந்திரி சபை வீழ்ச்சிக்குப் பிறகு ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஹடோயா-மா தலைமையில் புது மந்திரி சபை தோன்றியுள்ளதல்லவா? அதன் வெளி நாட்டிலாகா மந்திரி, "சுதந்திர நாடுகளுடன் ஒத்துழைப்பதற்குப் பாதகமேற்படாத வகையில் ரஷ்யா—சீனா ஆகிய நாடுகளுடன் நட்புறவை மீட்க தயாராக இருக்கிறோம்: தத்துவ மாறுபாடுகளைப் பொருட்படுத்தாது, எல்லா நாடுகளுடனும் ஒத்துழைக்கவும் தயாராக இருக்கிறோம்" என்று கூறியிருக்கிறார்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

அண்ணாதுரை

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

21—12—54: மாலை **6** மணிக்கு உலிபுரம் (சேலம் மாவட்டம்) தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்.

22—12—54: மாலை **6** மணிக்கு லப்பைக்குடிகாடு (திருச்சி மாவட்டம்) தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக் கூட்டம்.

23—12—54: மாலை **6** மணிக்கு லால்குடி (திருச்சி மாவட்டம்) தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக் கூட்டம்.

24—12—54: மாலை **6** மணிக்கு சின்னாளப்பட்டி (மதுரை மாவட்டம்) தி. மு. கழகக் கட்டிடத் திறப்பு விழா பொதுக் கூட்டம்.

26—12—54: மாலை **6** மணிக்கு இடையக்கோட்டை (மதுரை மாவட்டம்) தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக் கூட்டம்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களுடைய சுற்றுப் பயண நிகழ்ச்சிகளில், தோழர்கள் கே. ஏ. மதியழகன், அ. பொன்னம்பலனார் ஆகியவர்களும் கலந்து கொள்வார்கள்.

கழகக் கூட்டங்கள்

★

பெருந்துறை

தி. மு. கழக துவக்க விழா

ஸ்டோர் மைதானத்தில்

15—12—54 மாலை **6** மணிக்கு

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

★

தவுட்டுப்பாளையம்

(திருச்சி மாவட்டம்)

15—12—54 மாலை 6½ மணிக்கு

தலைவர்: டி. எம். நூர்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

இரா. சண்முகம்

வி. கே. ராஜு

★

திட்டாங்குடி

15—12—54 புதன் மாலை

தலைவர்: கோவிந்தன்

பேசுபவர்:

மணி எழிலன்

அனுதாபக் கூட்டம்

சென்னை கூட்டுறவு சங்கங்களின் துணை ரிஜிஸ்திராரும், அகில-இந்திய கைத்தறிபோர்டு மத்திய விற்பனை நிறுவனத்தின் டைரக்டருமான திரு. ஏ. டி. பாலசுந்தரம் அவர்கள் கடந்த நவ. **28**-ந் தேதியன்று இயற்கை எய்தியதை ஒட்டி, அன்னாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் **16—12—54** வியாழனன்று மாலை **6**-மணிக்கு சென்னை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க அலுவலகத்தில் (**34**, பாந்தியன் சாலை, எழும்பூர்) திரு. பி. டி. ராஜன் தலைமையில் ஒரு அனுதாபக் கூட்டம் நடைபெறும். கனம் சுப்பிரமணியம், திரு. செங்கல்வராயன் உள்ளிட்ட பலர் கூட்டத்தில் கலந்துகொள்வர்.

திருக்குறள் வகுப்பு

14—12—54 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, முத்துகிருஷ்ணன் தெரு, 15 எண்ணுள்ள இல்லத்தில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும் திருக்குறள் வகுப்பில் தோழர் மயிலை சிவமுத்து, தோழியர் சி. சுப்புலட்சுமி ஆகியோர் 'அழுக்காறுமை' என்பது குறித்து சொற்பொழிவாற்றுவர்.

பட்டம் தாணு ஆட்சிக்கு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தின்படி, வளம் பெருக்கும் ஏற்பாடுகளை நிறைவேற்றவும், அவைகளுக்கு ஆகும் செலவினைக் கண்காணிக்கவும், வளம் கூட்டுதற்கு வாய்ப்பில்லாத யோசனைகளை ஆராயவும், காங்கிரஸ் கட்சியினரே அதிக எண்ணிக்கையில் உடைய ஒரு குழுவை நியமிக்க, பட்டம் தாணு, சட்ட சபை காங்கிரஸ் கட்சித் தலைவரிடம், நான்கு மாதங்களுக்குமுன் வாக்குறுதி கொடுத்திருந்தாராம். அதை மீறி பட்டம் நடந்துகொள்ளுவதாகவும், அவ்வாறு மீறி நடப்பது பெரிய 'நம்பிக்கைத் துரோகமாகும்' எனத் தீர்மானம் குறிக்கிறது.

இதுதான், தான் காட்டிவந்த ஆதரவை மீட்டுக்கொள்ளும் முடிவிற்கு வருவதற்கான உடனடியான காரணம் என அத்தீர்மானம் விளக்கம் தருகிறது.

"ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் செயலாற்றப்பட வேண்டிய ஏற்பாடுகள் ஒரு அரசாங்கத்தையே பொறுத்த விஷயம் எனவும், அதிலும் அவ்வேற்பாடுகளை ஆராய நியமிக்கப்படும் ஒரு குழுவில் அதன் உறுப்பினர்களாகக் காங்கிரஸ் கட்சியினரையே அதிகப்படியாகச் சேர்ப்பது விரும்பக் கூடாதது எனவும் பட்டம் விளக்கியுள்ளார். ஆனால், அதற்குப்பதிலாக, சட்ட சபை உறுப்பினர்களையும், மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்களையும் கொண்ட ஒரு அறிவுரைக் குழுவை நியமிக்க, தாம் கருதியுள்ளதாக பட்டம் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட சபையில் எங்களைத் தோற்கடித்தால் அல்லாது, தாங்களாகப் பதவியை விட்டு விலகப்போவதில்லை என ஏற்கனவே ம. சோ. கட்சியின் சார்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சொற் பயிற்சிக் கூட்டம்

15—12—54 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் இரா. வேங்கடன் தலைமையில் 'நாலும் கோலும்' என்னும் பொருள் பற்றி நடைபெறும் சொற் பயிற்சிக் கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசுவர்.

சங்கர ரெட்டி காங்கிரசிலிருந்து விலக்கப்பட்டார்

ஏலூரு, டிச. 12—

ஆந்திராவில் பிரகாசம் தலைமையிலிருந்த காங்கிரஸ் மந்திரிசபை மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குச் சாதகமாக ஓட்டளித்து, மந்திரி சபையின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்த காங்கிரஸ்காரர்களான என். சங்கரரெட்டி, சுப்பிரமணியேஸ்வர ராவ் ஆகியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதல்லவா?

அவர்கள் தங்கள் செயலுக்குக் காட்டிய காரணங்களும், கூறிய சமாதானமும் திருப்திகரமானதாக இல்லை என்பதால், அவர்கள் இருவரையும் 5 ஆண்டு காலம் காங்கிரசிலிருந்து விலக்கிவைப்பது என்ற முடிவுக்கு ஆந்திர பிரதேச காங்கிரஸ் செயற் குழு வந்துள்ளதாகத் தெரிகிறது.

திரு. சங்கரரெட்டியை, அ. இ. கா. கமிட்டி அங்கத்தினர் பதவியிலிருந்து விலக்கும்படியும் கமிட்டி சிபாரிசு செய்துள்ளதாகத் தெரிகிறது.

அல்ஜீரியாவில்

பிரெஞ்சுக்காரர்களுக்கு இடி

வட ஆப்பிரிக்காவிலுள்ள பிரெஞ்சு ஆதிபத்தியத்தின் காலனியான அல்ஜீரியாவில், மீண்டும் 'பயங்கரவாதி'களின் தாக்குதல் ஆரம்பித்துள்ளதாம். இந்தத் தாக்குதலைச் சமாளிப்பதற்காக, ஆங்காங்குள்ள பிரெஞ்சுப் படைகளுக்கு உதவியாக 'பாரசூட்' துருப்புகள் அனுப்பப்பட்டுள்ளனவாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ, அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,